110

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## புவியியல்துறை, கலை கலாசார பீடம்

## நான்காம் வருட இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு

## 2008/2009 (Sept./Oct. 2014)

| GEOS 4202: அயனப் புவிவெளியுருவவியல் (Tropical Climatic Geomorphology) | நேரம் 03 மணித்தியாலங்கள் |
|---|---|

- எவையேனும் நான்கு (04) வினாக்களுக்கு விடை தருக.
- எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.
- பொருத்தமான இடங்களில் விளக்கப்படங்களின் துணையுடன் விடையளிக்குக.

1)

a. அயனக் காலநிலை என்பதனை வரையறுக்குக.

(05 புள்ளிகள்)

b. அயனப் பிரதேசம் ஒன்றில் உருவவியல் அம்சங்களின் தோற்றப்பாடுகளுக்குக் காரணமான காரணிகள் யாவை?

(08 புள்ளிகள்)

c. நீர் முன்வைத்த காரணிகளில் இரண்டினைத் தேர்ந்தெடுத்து அது அயனக் காலநிலை ஒழுங்குடன் கொண்டுள்ள தொடர்பினை மதிப்பிடுக.

(12 புள்ளிகள்)

2)

a. புவிவெளியுருவவியல் கற்கையின் அவசியம் யாதெனக் கருதுகின்றீர்.

(05 புள்ளிகள் )

b. புவிவெளியுருவவியலின் கருவிகள் (Tools of Geomorphology) எனக் கருதப்படுபவை யாவை?

(08 புள்ளிகள்)

c. புவிவெளியுருவவியல் பற்றிய கற்கையில் நீர் குறிப்பிட்ட கருவிகளின் போக்குக் குறித்து மதிப்பிடுக.

(12 புள்ளிகள்)

3)

a. புவிவெளியுருவவியல் அம்சங்களைத் தோற்றுவிப்பதற்குக் காரணமான ஏதுக்கள் (Agents) யாதெனக் கருதுகின்றீர்.

(05 புள்ளிகள்)

b. மேற்படி ஏதுக்கள் எத்தகைய செயன்முறைகளுக்கூடாக உருவவியல் மாற்றங்களை தோற்றுவிக்கின்றது என்பதனை உதாரணங்களுடன் கருத்துரைக்குக.

(08 புள்ளிகள்)

c. புவிவெளியுருவவியல் தோற்றப்பாடுகள் அனைத்துக்கும் அடிப்படையிலான சக்தி மூலங்களை கண்டறிந்து அவற்றின் செல்வாக்குக் குறித்து விளக்குக.

(12 புள்ளிகள்)

4) a. பாறை ஒன்று வானிலையாலழிதலுக்கு உட்படக் காரணமான வளிமண்டலச் செயன்முறை குறித்து விளக்குக.

(10 புள்ளிகள்)

b. பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்து, நீர் குறிப்பிட்ட பாறைகளின் பிரயோகங்கள் குறித்து தெளிவுபடுத்துக.

| பாறை வகை | உள்ளடங்கும் பாறைகள் | உருவாக்கம் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

(15 புள்ளிகள்)

5) 'மொன்சூன்' பருவங்களை வரையறுத்து, அவை கரையோரப் புவிவெளியுருவவியலில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பதனை ஆராய்க.

(25 புள்ளிகள்)

6) பின்வருவனவற்றுள் இரண்டிற்கு குறிப்புரை எழுதுக.
   a. கரையோரச் செயன்முறைகளும், நிலவுருவங்களும்
   b. உயிர்ப் பொறிமுறை வானிலையாலழிதல்
   c. இடை அயன ஒருங்கல் வலயம்

(12½ x2 = 25 புள்ளிகள்)